பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 02 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவர்களின் ஆற்றலையும், திறமைகளையும் அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வழிகாட்டியாக பரிக்ஷா பே சர்ச்சா அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணிக்கு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று பாராட்டு தெரிவிக்கப்பட்டது.
3. மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.
4. மகா சாகர் திட்டத்தின்கீழ் பொருளாதார செழிப்பையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று **Seychelles** அதிபர் டாக்டர் **Patrick Herminie**-யிடம், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் உறுதியளித்தார்.
5. ஜம்மு காஷ்மீரின் முக்கிய வழிபாட்டுத் தலமாக விளங்கும் ஸ்ரீ வைஷ்ணோ தேவி கோவிலின் வளர்ச்சிக்காக தேவஸ்தான வாரியம் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<<<>>>>>>

சிறிய புத்தொழில்களை தொடங்கி, தங்களது தொழில் முனைவோர் பயணத்தை தொடங்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி மாணவர்களை ஊக்கப்படுத்தியுள்ளார்.

பரிக்ஷா பே சர்ச்சா ஒன்பதாவது கலந்துரையாடலின் இரண்டாவது பகுதியில் காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர், இளம் சிந்தனையாளர்களிடமிருந்து புதிய கருத்துகளும், படைப்புகளும் உருவாவதாக கூறியுள்ளார்.

தொழில் நிபுணர்களை சந்தித்து, உலகின் பல்வேறு தொழில்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அனுபவ ரீதியாக கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பாடப் புத்தகங்களுக்கு மேலான கல்வி அறிவை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தங்களின் விருப்ப தெரிவுக்கும், பாடத்திற்கும் இடையே சமநிலையை பராமரிக்க வேண்டியது அவசியம் என்று கூறிய பிரதமர், கல்வியும், படைப்பாற்றலும் இருவேறு பாதைகள் என கருதாமல், இரண்டையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

படைப்பாற்றலுக்கான பொழுதுபோக்குகள் மாணவர்களை அழுத்தத்தில் இருந்து விடுவிக்கும் என்றும் அவர் கூறினார்.

தூய்மைப் பராமரிப்பு மற்றும் பொதுவாழ்வு குறித்த விழிப்புணர்வையும், பொறுப்பையும் வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், சாலைகளில் குப்பைகள் போடுவதை தவிர்ப்பது, சாலை விதிகளை மதிப்பது, உணவுப் பொருட்களை வீணாக்காமல் இருப்பது உள்ளிட்ட பண்புகளை அடிப்படையிலேயே வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் ஒழுக்கம், நாட்டின் வளர்ச்சியை கட்டமைக்கும் ஒரு பகுதியாக அமைந்துள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்காக குரல் கொடுப்போம் என்று கூறிய பிரதமர், இந்திய பொருட்களை வாங்குவதால் நாட்டின் பொருளாதாரம் உயரும் என்றும் தெரிவித்தார்.

திருமண நிகழ்ச்சிகளை உள்நாட்டிலேயே ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற இயக்கம் போன்றவற்றிற்கும் மாணவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நாம் வைக்கும் ஒவ்வொரு அடியும், பலன் அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் ஒழுக்கத்தை கடைபிடிப்பதோடு மட்டுமின்றி, ஊக்கத்தோடு செயல்பட வேண்டியதும் அவசியம் என்று அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து மாணவர்கள் அச்சமடையத் தேவையில்லை என்று கூறிய பிரதமர், இத்துறையில் வளர்ச்சி பெற்று தங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தையே முற்றிலும் சார்ந்திராமல் அதனை மிகவும் கவனமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் பயன்படுத்திக் கொள்ளும் அறிவாற்றலை பெற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

இன்று நடைபெற்ற பரிக்ஷா பே சர்ச்சாவில், கோயம்புத்தூரில் இருந்து பல மாணவர்கள் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் கலந்துரையாடினர்.

பல பயனுள்ள தகவல்களை பிரதமரிடம் தாங்கள் பகிர்ந்து கொண்டதாக மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

***(Sound Byte — மாணவர் - 43 Sec. )***

<<<<<<<>>>>>>

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணிக்கு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மக்களவை இன்று தொடங்கியதும், அவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, இங்கிலாந்து அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் இந்திய வீரர்கள் தங்களது அபரிமிதமான திறமையை உறுதியோடு வெளிப்படுத்தி உள்ளனர் என்று தெரிவித்தார்.

கிரிக்கெட் அணியினர் மிகுந்த கண்ணியத்தோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்த வெற்றியை பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சாதனை நாட்டில் உள்ள கோடிக்கணக்கான இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக திரு ஓம். பிர்லா கூறினார்.

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியினருக்கு மாநிலங்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அவைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், மிகுந்த திறமைகளோடும், விடா முயற்சியோடும் இந்த சாதனையை நமது கிரிக்கெட் வீரர்கள் படைத்துள்ளதாக பாராட்டினார்.

மிகுந்த ஒழுக்கத்தோடு கூட்டாக செயல்பட்டு, இந்திய அணியின் வெற்றிக்கு அவர்கள் வழிவகுத்ததாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

மக்களவையில் கேள்விநேரம் தொடங்கியபோது காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து பல்வேறு விஷயங்ளை கூறி கோஷங்களை எழுப்பினர்.

அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா, உறுப்பினர்கள் விதிகளை பின்பற்றி கண்ணியத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்காண்டார்.

கேள்விநேரத்தில் எழுப்பப்படும் முக்கிய பிரச்சினைகளுக்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது என்றும், அதற்கு இடையூறாக செயல்படக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கெணாடார.

தொடர்ந்து உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் முதலில் 12 மணிவரையிலும், பின்னர் 2 மணிவரையிலும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>

மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்ற விதிகளை மீறி அவை நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவாதத்தின்மீது மக்களவையில் பேச உள்ள உறுப்பினர்களின் பட்டியலை ஏற்கனவே மத்திய அரசு சமர்ப்பித்ததாக கூறினார்.

அந்த உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை முன்வைக்க இயலாமல் போனதற்கு காங்கிரஸ் கட்சியே பொறுப்பு என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

புதுதில்லி வந்துள்ள **Seychelles** அதிபர் டாக்டர் **Patrick Herminie** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக, திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியாவின் கடல்சார் நட்பு நாடாக விளங்கும் **Seychelles,** இந்தியாவின் மகா சாகர் தொலைநோக்குத் திட்டத்திற்கு ஆதரவு

அளித்து, பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்திருப்பதாகவும், கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகலில் பிரதமர் திரு நரேந்திர மோடியும், **Seychelles** அதிபரும் நடத்தும் பேச்சுவார்த்தைகள் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதோடு புதிய வாய்ப்புகளுக்கும் வழிவகுக்கும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரின் முக்கிய வழிபாட்டுத் தலமாக விளங்கும் ஸ்ரீ வைஷ்ணோ தேவி கோவிலின் வளர்ச்சிக்காக தேவஸ்தான வாரியம் புதிய திட்டங்களை அறிவித்துள்ளது.

மகா சக்தி ஸ்ரீ வைஷ்ணோ தேவியின் ஆன்மீக பாரம்பரியத்தை உலகிற்கு தெரியப்படுத்தும் வகையில், சர்வதேச அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், திருக்கோவிலின் சிறப்பு இயல்புகளை விளக்குவதற்காக உலகத்தரத்தில் ஒலி-ஒளி காட்சி நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த திருக்கோவிலில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் நிரப்புவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவும் தேவஸ்தான நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு இலவச பயிற்சி அளிப்பதற்கான மையங்களை அப்பகுதியில் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ வைஷ்ணோ தேவி கோவிலுக்கு வரும் யாத்ரிகர்களை அழைத்து செல்லும் குதிரை பராமரிப்பாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தையும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் சுயஉதவிக் குழு பெண்கள் மற்றும் இளம் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் ஸ்ரீ வைஷ்னோ தேவி தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

கர்நாடகா மாநிலத்தில் நேரிட்ட இருவேறு சாலை விபத்துகளில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

**Bidar** மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் **3** பேரும், கோலார் மாவட்டத்தில் நேரிட்ட மற்றொரு சாலை விபத்தில் மேலும் **3** பேரும் உயிரிழந்ததாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இரண்டு பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

<<<<<<<>>>>>>

அமெரிக்காவும், தென்கொரியாவும் ஒருவார கால விமானப்படை பயிற்சியை **Osan** விமானப்படை தளத்தில் இன்று தொடங்கியுள்ளது.

வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் இப்பயிற்சியின்போது, ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொள்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்த விமானப்படை பயிற்சி, இருநாடுகளும் தாக்குதல் உத்திகளை பகிர்ந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

நான்காவது மற்றும் ஐந்தாவது தலைமுறை ஜெட் போர் விமானங்களை ராணுவ நடவடிக்கையின்போது வெற்றிகரமாக பயன்படுத்துவது குறித்தும் இதில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

<<<<<<<<END>>>>>>>